மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை.
முன்னிலை: திருமதி.S.ரேவதி., பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாடானை.

2026-ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 03-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

I.A. No.866 of 2024
in
O.S.No.99 of 2018

1. நல்லப்புடையார் (மரணம்)
2. பால்ராஜ்
3. பாரதிராஜா
4. காந்திமதி ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

சேவுகப்பெருமாள் ..... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது இந்நீதிமன்றம் முன்பு 22.06.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.பாலாஜி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.U.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் கீழ் இருந்து வந்த இந்த வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்,

உத்தரவு

அ.வ.எண்.99/2018, அ.வ.எண்.02/2019 வழக்கையும் ஒருசேர இணைத்து ஜாயின்ட் டிரையலாக நடத்த உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.07.03 14:59:08 +0530

**1. மனுவின் சுருக்கம் :**

**1.1.** அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனுதாரர் மீது அ.வ.எண்.02/2019 என்ற எண்ணில் விளம்புகை மற்றும் அனுபவமீட்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி இரண்டு வழக்குகளும் ஒரே சொத்தைப் பொறுத்து ஒரே தரப்பினர்களிடையே நடக்கும் வழக்குகள் ஆகும். இரு வழக்குகளிலும் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் ஒரே ஆவணங்கள் ஆகும். 2 வழக்குகளையும் ஒருசேர இணைத்து ஜாயிண்ட் டிரையலாக வழக்கை நடத்தினால் இருவேறுபட்ட தீர்ப்புகள், இருவேறுபட்ட விசாரணை நடக்காமல் இருக்கும். அதனால் இருவழக்குகளையும் ஒருசேர ஜாயிண்ட் டிரையலாக நடத்த உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

**2. எதிருரையின் சுருக்கம்:**

**2.1.** அ.வ.எண்.02/2019 வழக்கையும் ஜாயிண்ட் டிரையலாக நடத்த அனுமதி கோரி மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கானது பிரதிவாதி/எதிர்மனுதாரர் தரப்பில் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இருவழக்குகளும் வாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. அ.வ.எண்.02/2019 வழக்கின் பரிகாரமும், இந்த அசல் வழக்கின் பரிகாரமும் வெவ்வேறாக இருப்பதால் ஒருசேர விசாரணை செய்தால் வழக்கின் தன்மை மாறிப்போக வாய்ப்புள்ளது. மனுதாரர் மனுவை தாக்கல் செய்து காலதாமதத்தை ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறார். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3.** இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

REVATHI SUBBIAH
Digitally signed by REVATHI SUBBIAH
Date: 2026.07.03 14:59:17 +0530

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதியாதனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனு அனுமதிக்கத்தக்கதா என பரிசீலனை செய்கையில், மனுதாரர் தரப்பு வாதத்தின் போது, அ.வ.எண்.99/2018 வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அ.வ.எண்.02/2019 என்ற வழக்கு சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது, இருவழக்குகளும் ஒரே சொத்தைப் பொருத்து ஒரே தரப்பினர்களுக்கு இடையே நடைபெற்று வருகிறது, எனவே இரு வழக்குகளையும் ஒருங்கிணைந்த விசாரணையாக (Joint Trial) விசாரிக்க அனுமதிக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, எனவே இம்மனுவினை அனுமதிக்க வேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.

6. எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தின் போது, இருவழக்குகளும் வெவ்வேறு சொத்தைப் பொருத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு இருப்பதாக ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். சொத்தினை அளக்கக்கூடாது என்பதற்காக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கினை தாக்கல் செய்துள்ளார், வழக்கின் நடவடிக்கையை இழுத்தடிப்பதற்காக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார், எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.

7. இருதரப்பு வாதங்களையும் கருத்தில்கொண்டு வழக்குக் கோப்பினை பரிசீலனை செய்ததில், அ.வ.எண்.99/2018 வழக்கானது இம்மனுதாரர்களால் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் வழக்குச் சொத்தான சர்வே எண்.111/12A மற்றும் சர்வே எண்.111/12B காட்டப்பட்டுள்ளது. அதேபோல், அ.வ.எண்.02/2019 வழக்கில் இந்த எதிர்மனுதாரரால் மனுதார்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் தாவா சொத்தாக சர்வே எண்.111/13 காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் இருவழக்குகளும் ஒரே தரப்பினர்களுக்கு இடையே

REVATHI SUBBIAH
Digitally signed by REVATHI SUBBIAH
Date: 2026.07.03 14:59:23 +0530

நடைபெறுகிறது என்றாலும், வெவ்வேறு சொத்தைப் பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. ஒரே சொத்தைப் பொறுத்து ஒரே தரப்பினர்களுக்கிடையே தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி ஒன்றாக இருக்கும் பட்சத்தில் ஒருங்கிணைந்த விசாரணைக்கு உத்தரவிடலாம். ஆனால் இவ்வழக்குகள் ஆனது வெவ்வேறு சொத்தைப் பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒருங்கிணைந்த விசாரணைக்கு (Joint Trial) உத்தரவிட இயலாது. ஆனால் இருவழக்குகளையும் பரிசீலனை செய்ததில் இருவழக்குகளும் அருகருகே உள்ள சொத்தைப் பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. எனவே இருவழக்குகளையும் ஒரே நேரத்தில் விசாரணை செய்யலாம் (simultaneous trial) என இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு உத்தரவிடும் பட்சத்தில் இருதரப்பினருக்கும் எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை. எனவே இம்மனு பரிகாரத்தினை மாற்றியமைத்து (Modify) அ.வ.எண்.02/2019 மற்றும் அ.வ.எண்.99/2018 ஆகிய வழக்குகளை ஒரே நேரத்தில் விசாரணை செய்ய (simultaneous trial) அனுமதி வழங்கப்படுகிறது.

**8. முடிவாக, இம்மனு பரிகாரம் மாற்றியமைத்து இம்மனு அனுமதிக்கப்படுகிறது. அ.வ.எண்.02/2019 மற்றும் அ.வ.எண்.99/2018 ஆகிய வழக்குகளை ஒரே நேரத்தில் விசாரணை செய்ய (simultaneous trial) அனுமதி வழங்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் பதிவு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் மேற்கொள்ளப்பட்டு 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 03-ஆம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

REVATHI SUBBIAH
Digitally signed by REVATHI SUBBIAH
Date: 2026.07.03 14:59:28 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருவாடானை.**

<u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**</u> **இல்லை**

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும்  சான்றாவணங்கள்:**</u> **இல்லை**

REVATHI SUBBIAH
Digitally signed by REVATHI SUBBIAH
Date: 2026.07.03 14:59:34 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருவாடானை.**

மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருவாடானை.
I.A. No.866 of 2024
in
O.S. No.99 of 2018
சீரான/வரைவு உத்தரவு

நாள்: 03.07.2026.